அதோடு, இந்த பகுதிநேரக் கடையைப் பிரித்த பின்னர், நகர்ப்பகுதியாக இருந்தால் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று பலமுறை இம்மாமன்றத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதே கிராமப்புறங்களில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், பகுதிநேரக் கடை அமைக்கின்றபோது, அந்தக் கடை அமைப்பதற்கான கட்டடம் வாடகை இல்லாமல் இலவசமாகக் கிடைக்க வேண்டும். இரண்டாவது, கொண்டு செல்கின்ற பொருட்கள், நகர்வு செய்கிற பொருட்களுக்குரிய வாடகை அதையும் அந்த ஊர் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், அந்தத் தாய்க் கடையில் பணிபுரியும் அதே பணியாளர்கள் அந்தப் பகுதிநேரக் கடையையும் திறக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு மேல் அந்தக் கடையைத் திறப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, இதையும் கருத்தில் கொண்டு, அந்தக் கடை அமைகின்ற வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கின்றபோது, எந்த நியாய விலைக் கடை சங்கத்தால் நடத்தப்படுகிறதோ, அந்தச் சங்கம் அதை அமைத்துக் கொடுக்கும். இதற்கான கோரிக்கையை வட்ட வழங்கல் அலுவலரும், மண்டல இணைப் பதிவாளர் ஆகியோரிடம் ஊர்ஜிதம் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியைப் பெற்று அங்கேயே அமைத்துக்கொள்ளலாம். இதில், ஏதாவது குறையும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியையும், மண்டலப் பதிவாளர் அவர்களுடைய கோரிக்கையையும் வைத்து, உணவுத் துறை ஆணையாளருக்கு அனுப்புவார்களேயானால் அதன் பின்னர் அரசு முடிவு எடுத்து அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

தூர் வாருதல்

***3731—திரு. எஸ். செந்தில்குமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, குவலை வடிகாலைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவெறும்பூர் தொகுதி, குவலை வடிகால் தூர் வாரும் பணியை அரசு மேற்கொள்ளுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். திருவெறும்பூர் தொகுதி, குவலை வடிகால் வாய்க்காலின் மொத்த நீளத்தில் இதுநாள் வரை சுமார் 1500 மீட்டர் நீளத்திற்கு தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் தூர் வாரும் பணிகள் நிறுத்தப்பட்டன. மேட்டூர் அணையிலிருந்து மீண்டும் நீர் திறந்துவிடுவதற்கு முன்னால், நிதிநிலைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.*

திரு. எஸ். செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தூர் வாரும் பணிகளை மழைக் காலம் வருவதற்குள்ளாக முடித்துக்கொடுத்தால், எனது தொகுதியின் முக்கிய பகுதிகளான சொரியூர், அண்ணா நகர் போலீஸ் காலனி, கும்பக்குடி, சோழமாதேவி, ஆலத்தூர், மஞ்சத்திடல், எல்லைக்குடி, கைலாஷ் நகர், வேங்கூர், ஏத்தண்டார்பட்டி, நடராஜபுரம், அரசங்குடி, விளாங்குளம், மேலவிளாங்குளம், கிளியூர், முறுக்கூர் போன்ற ஏராளமான கிராமங்கள் இதிலே பயன் அடையும்.*

முற்பகல் 10—35

அதுமட்டுமல்லாமல் கல்லணையில் அமைந்திருக்கின்ற இந்த வெள்ளனூர் கீழ்போக்கி சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்று 2—2—2012 அன்று கேள்வி நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, அது பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார். அந்தக் கீழ்போக்கிகளை உடனே சரி செய்தால் மட்டுமே குவலையில் வருகின்ற இந்த

2012 ஏப்ரல் 19]

வெள்ள நீர் வெளியேறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பணியினை போர்க்கால அடிப்படையில் செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து நீர் விடுவதற்கு முன்பாகவே, பணிகள் விரைவாக நடைபெறும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை உடனே நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திற்கு விவசாயம்தான் ஆதாரம் என்பது அனைவரும் அறிந்ததாகும். எனவே, எங்களது தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதி பயன்பெறும் வகையில், விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்பே, காவிரி, அரசலாறு, நாட்டாறு, திருமலைராஜன், வெண்ணாறு, வெட்டாறு, கீர்த்திமாமனாறு, பழவாறு ஆகிய ஆறுகளில் ஆக்கிரமித்திருக்கின்ற நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றி, தூர் வாரி, விவசாயிகளுடைய நலன் காக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணையின்பேரில் தூர் வாரும் பணிகள் விரைவில் நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் சீராப்பள்ளி பேரூராட்சி, 5—வது வார்டு, ஒடுவன்குறிச்சி கிராமத்தில் அனைத்து கழிவுநீரும் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் பகுதியில் உள்ள குளத்தில் போய்ச் சேருகின்றது. இதனால் அந்தப் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு நோய் பரவுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குளத்தைத் தூர் வாருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற குளம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளம் என்றால், உடனடியாகத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு நீங்கள் வாய்ப்புக் கொடுக்க மாட்டீர்கள் என நினைத்தேன். நான் கேட்டுக் கேட்டு வெறுத்துப் போய் உட்கார்ந்திருந்தேன். கடைசியில் வாய்ப்புக் கொடுத்து விட்டீர்கள். நன்றி. (குறுக்கீடு) சார் நான் கேட்டுக் கேட்டு வெறுத்து, கடைசியில் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். பலமுறை வாய்ப்புக் கேட்டுவிட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் பொறுங்கள். நான் சொல்லிவிடுகிறேன். நேரம் இருக்கின்ற சூழ்நிலையில், ஒரு மூலக் கேள்விக்கு பல உறுப்பினர்களுக்கு துணைக் கேள்வி கேட்பதற்கான வாய்ப்பு தருகின்ற சூழ்நிலை இருக்கின்றது. நேரம் இல்லாத காரணத்தினால், கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்ற முறையில் வாய்ப்புக் கொடுக்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் ஒருவர் மட்டும் கையைத் தூக்கினார், அவருக்கு மட்டும் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். அதேபோல் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தில் ஐந்து உறுப்பினர்கள் கையைத் தூக்கினார்கள். திருமதி ஆர். சாந்திக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அதேபோல் திராவிட*

2012 ஏப்ரல் 19]

முன்னேற்றக் கழகத்தில் ஐந்து உறுப்பினர்கள் கையைத் தூக்கினார்கள். திரு. க. அன்பழகனுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நேரம் இல்லாத வேளையில் இந்த முறை கடைப்பிடிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவது தாங்கள் எங்களுக்கு இந்திய தேசிய காங்கிரசுக்கும், எங்கள் சட்டமன்ற கட்சிக்கும் அறையை ஒதுக்கியதற்கு பின்பு இன்றுதான் எனக்குப் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதற்கு உங்களுக்கு நன்றியை எனது கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நெய்யாறு இடதுகரைக் கால்வாயைத் தூர் வார 69 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்து கோதையாறு வடிகால் வட்ட அதிகாரி, அரசிடம் நிதியைக் கோரியுள்ளார். அந்த நிதியை இந்த ஆண்டிலேயே வழங்கி, கேரளச் சட்டமன்றத்தில் தண்ணீர் வழங்க இசைவு தந்திருக்கும் நிலையில், தண்ணீரைப் பெறவும், தூர் வாரவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துரு வந்திருப்பின் தூர் வார விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயில் கொக்குலம் விரிவாக்கக் கால்வாயைக் கட்டி முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கும். அது பழுதடைந்துள்ளது. அதனைப் புனரமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் நகர்ப் பகுதியில், பாட்டக்குளம் ஒன்று உள்ளது. இக்குளத்தின் மூலமாக நகர்ப் பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்கள் பயன்பெற்று வருகின்றனர். இக்குளத்தினைத் தூர் வாரி, மேம்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்தைத் தூர் வாரும் பணிகளுக்காக, மதிப்பீடு தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த மதிப்பீடு தயாரிக்கும் பணி முடிவடைந்தவுடன் பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மைக் கொடுக்கிறேன்; என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அளித்த இத்தனை கேள்விகளுக்கான பதில்களில், எந்தப் பதிலிலும் தூரோ, பிசிறோ இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தெளிந்த நீரோடைபோல் உள்ளது, நீரூற்றுபோல் உள்ளது.*